**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.13/2014**
**Prosecution Witness P.W. 4**

.....

| | | | |
|---|---|---|---|
| Name : | திருமதி. ஹேமலதா | Caste : | |
| Father's name : | | Calling : | |
| Village : | | Religion : | |
| Taluk : | | Age : | |

நாள் - **05.03.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல்விசாரணை:-**

நான் தமிழ்நாடு தடயஅறிவியல் துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து 30.04.2023 அன்று பணிஓய்வு பெற்றேன். எனக்கு 35 ஆண்டு இயற்பியல் பிரிவில் பணிபுரிந்த அனுபவம் உள்ளது. நான் பணியில் இருந்த போது அவனியாபுரம் காவல்நிலைய குற்ற எண்.302/2001-ல் சம்பந்தப்பட்ட வழக்குச் சொத்துக்கள் சீல்கள் நல்ல நிலையில் இருந்த ஒரு மரப்பெட்டியில் RPR No.299/2001 என்று குறிக்கப்பட்டதும், மதுரை நீதித்துறை நடுவர் எண்.7 அவர்களின் 16.08.2002 தேதியிட்ட கடிதமும், தலைமை காவலர் எண்.793 திரு.பெருமாள் என்பவர் மூலம் 19.08.2002 அன்று எங்கள் ஆய்வகத்தில் மீட்டரில் உள்ள முத்திரைகள் உண்மைத்தன்மை அறியும் ஆய்விற்காக பெறப்பட்டது. மரப்பெட்டிக்குள் இருந்த நான்கு சீல்கள் (வலது மேல் வலது கீழ் இடது மேல் மற்றும் இடது கீழ்) கொண்டு வரிசை எண்.0286493 மும்முனை மின்சார மீட்டர் (simco) ஆர்.பி.ஆர் எண்.299/2001 டயல் ரீடிங் 022209 என்ற பொருள் 1 ஆக குறியீடு செய்தோம். உலோகசீல் எண்.D21874 என்ற எண் கொண்ட சீலை பொருள் 2 ஆகவும் குறியீடு செய்து இயற்பியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நான்கு சீல்களான வலது மேல், வலது கீழ், இடது மேல், இடது கீழ் சீல்கள் சீலிங் வயருடன் இறுக்கமாகவும், சீலிங் வயர்கள் மீட்டரின் திருகுகளுடன் இறுக்கமாகவும் இருந்தது. முனை கவரின் மேல் இருக்க வேண்டிய சீல் காணப்படவில்லை. மேற்கண்ட ஆய்வில் கருத்துரை வலது மேல், வலது கீழ், இடது மேல், இடது கீழ் சீல்களை கொண்ட சீல்கள் not tampered என்றும், மேலும் சீல்களில் உள்ள முத்திரைகளின் உண்மைத்தன்மை ஆன

ஆய்விற்கு மீட்டர் compartment சீல் பொருள் 2 க்கு இணையான மாதிரி சீல்கள் ஆய்விற்கு தேவைப்படுகிறது, அவை எங்கள் ஆய்வகத்தில் பெறப்படவில்லை. அந்த கருத்துரையுடன் கூடிய ஆய்வறிக்கையை மீட்டருடன் சேர்த்து அனுப்பி வைத்தோம். நான் வழங்கிய ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். இதுசம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் மூலம்)

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.